
# காஞ்சி

5-30-31-32. 5 32



# எங்கள் அஞ்சலி

கடந்த 3—2—69 அன்று எங்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்த 'எங்கள் தெய்வ'த்திற்கு எங்கள் அஞ்சலி.

தேம்பியழுத எங்களுக்கு ஆறுதல் சொன்னோர் பலர்.

குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர், துணைப் பிரதமர், மத்திய அமைச்சர்கள், தமிழக முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள், இதர மாநில அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் பலரும், நேரிலும் கடித மூலமும் ஆறுதல் கூறினர்.

மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், வெளிநாட்டிலிருந்து சில மருந்துகளைக் கொண்டு வர உதவியவர்கள் ஆகியோருக்கு எங்கள் வாழ் நாள் முழுதும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

தேறுதல் சொல்ல பல இலட்சம்பேர் இருக்கிறார்கள் என்ற நினைப்பிலேயே எங்களைத் தேற்றிக் கொள்ள முயற்சிக்கிறோம்.

பரிமளம்,<br>
இளங்கோவன்,<br>
கௌதமன்,<br>
இராசேந்திரன்.

இராணி அண்ணாதுரை.

20—2—69.

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 23—2—69 | இதழ் 30, 31, 32

# தாங்கும் இதயம் தூங்குகிறது

நெஞ்சிலே மூண்டுவிட்டிருக்கும் நெருப்பினை அணைக்க வழியில்லை. ரஷியத் தூதர் ஒருவர் குறிப்பிட்டிருப்பதுபோல, பேரறிஞர் அண்ணா அவர்களது இழப்பின் மூலம், உலகப் பெருந் தலைவர்களில் ஒருவரை நாம் இழந்து தவிக்கிறோம்.

டாக்டர் அண்ணா அவர்கள், தாம் எழுதிய 'வேலைக்காரி' திரைப்படத்தில் "நச்சுப் பாம்பு தினம் வரவேண்டும்; அச்சுறுத்த வேண்டும்; கடிக்க வேண்டும்; உயிர்த் துடிக்க வேண்டும்; உயிர் மட்டும் போகக்கூடாது" என்று குறிப்பிட்டதைப்போல ஜனவரித் திங்கள் 13ம் நாள், அடையாறு மருத்துவ மனையில், அமெரிக்க டாக்டர் மில்லர் அவர்கள் செய்துவிட்டுச் சென்ற சிறிய ஆபரேஷனுக்குப் பிறகு, ஜனவரி 20-ம் நாளிலிருந்து பிப்ரவரித் திங்கள் 2ம் நாள் காலை வரையில் பேரறிஞர் அவர்களைப் பற்றிய செய்தி, இந்தியத் துணைக்கண்டத்தை, சிறப்பாகத் தமிழகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கவலைக் கடலுக்குள் மூழ்கச் செய்துவிட்டு, ஞாயிறன்று நள்ளிரவு 12-20க்கு நம்மையெல்லாம் துடிதுடிக்கச் செய்துவிட்டு மீளாத் துயில் கொண்டு விட்டார்கள்.

தமிழக மக்கள், அறிஞர் பெருந்தகையின் மறைவு குறித்தச் செய்தியைக் கேட்டவுடன், வேதனை வெள்ளத்தில் வீழ்ந்து, "அண்ணா அண்ணா" என்று கதறியழுத காட்சி இன்னமும் நம் மனக் கண்ணை விட்டு மறைய மறுக்கிறது.

சாவு என்னும் சண்டாளத்தனத்திற்கு எத்தனைக்கொடிய இதயம் இருக்கிறது என்பதனை பேரறிஞர் தம் மறைவின் மூலம் உணர முடிகிறது.

"அறிஞர் அண்ணா அவர்கள், தான் அரசியலில் புகுந்தநாள் முதல், மறைந்த கலைவாணர் சிலைத் திறப்புவிழாவில் கலந்து கொண்டதுவரையில் நாட்டுக்கறிவித்த செய்திகள் ஏராளம், புத்தம் புதிய சிந்தனைகள் ஆயிரமாயிரம். வகுத்தளித்த கொள்கைகள், தீட்டித்தந்த திட்டங்கள், காட்டிவந்த வாழ்வுப் பாதைகள் அனந்தம் அனந்தம். அவை அத்தனையையும்விட, தம்மை ஒரு வரலாற்ருக்கிக்கொண்டு, காலமாக்கித் தந்துவிட்டு மறைந்தபோதில், சாவு என்பதன் கொடுமையினையும் உணர்த்திவிட்டுச் சென்றிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மறைந்து கொண்டுவிட்ட இடத்தில், சமாதியின்மேல் "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்று பொறித்து வைத்திருக்கிறார்கள்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவத்தினை எளிமையாக்கித் தந்த அந்த ஏந்தல், 'எதையும் தாங்கும் இதயம்' கொண்டவராக இருந்தார் என்பது மட்டுமல்லாமல், நாட்டவரையும் அப்படி இருக்கப் பழக்கினார். அப்படிப்பட்டவரே, இரங்கற் செய்தியொன்றில்—

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று நான் சொல்லாத நாளில்லை. இதயம்

"தாங்கிக் கொள்ள முடியாத பெருநெருப்புப் புகுந்து சுட்டுச் சுட்டு எரிக்கிறது"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடி கே. வி. கே. சாமியைப் பற்றிய மரணச்செய்தி கேட்டுத் தன் நிலையைப் படம் பிடித்துக்காட்டிய போது இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களே தம் செயல் மறவர் ஒருவரது இழப்புக் குறித்து எழுதும் போது, "தாங்கிக்கொள்ள முடியாத பெரு நெருப்பு" என்றார்கள் என்றால், அதை எடுத்துக் காட்டிய மாமேதையின் மறைவுச் செய்திகேட்டு தாங்கிக்கொள்ள முடிந்தவர்கள் தமிழகத்தில் எப்படி இருக்க முடியும்? இதனையும் தாங்கிக் கொள்ளும் இதயம் எவருக்கு இருக்கமுடியும்?

அறிஞர் அண்ணா அவர்களது மறைவு குறித்து நாடெங்கிலுமிருந்து இரங்கற் செய்திகளை விடுத்திருக்கிறார்கள், அரசியல் தலைவர்கள், ஆட்சித் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், என்று எல்லாத் தரப்பிலிருந்தும் பேரறிஞர்தம் பிரிவு ஆற்றாமைபற்றி அறிவித்திருக்கிறார்கள்.

"அண்ணாவின் மறைவு கண்டு வருந்துகிறேன்; தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைமையை அவர் தமிழ் நாட்டுக்குத் தந்தார் மத்திய மாநில அரசுகளுக்கிடையே சுமுகமான உறவை வளர்ப்பதில் அவர் அளப்பரிய பங்கைச் செலுத்தியுள்ளார்.

மக்களுக்கு அவர் நிறைய தரவேண்டியிருக்கிற நேரத்தில் சாவு அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டதானது அவலமானது"

என்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்,

"என்துயரம் வார்த்தைகளில் அடங்காது."

என்று இரத்தினச் சுருக்கமாக மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறி, எவ்வளவு பெரிய இழப்பு இந்த நாட்டுக்கு என்பதைச் சொல்லாமற் சொல்லி இருக்கிறார்கள்.

"மக்கள் அனைவரது நன்மதிப்பையும் பெற்று புகழின் உச்சியில் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அறிஞர் அண்ணா அவர்களது மறைவு இந்தியா முழுவதற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்"

என்று குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் குறிப்பிட்டுள்ளார். குடியரசுத் தலைவர் அவர்கள், பேரறிஞர் அவர்கள் மூலம் தமிழகத்தின் வாழ்வுபற்றி எவ்வளவோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதன் எதிரொலியை இந்தியா வெங்கணுமே பரப்ப அவர் எதிர்பார்த்திருந்தார். தன் ஏமாற்றம் எத்தகையது என்பதைப் பிரதிபலிப்பதாகத்தான் இந்தச் செய்தி இருக்கிறது. உள்துறை அமைச்சர் சவாண்,

"மக்கள் தொண்டில் அண்ணா அவர்கள் கொண்டிருந்த உண்மையான ஈடுபாடு லட்சோப லட்சம் மக்களின் போற்றுதலை, அன்பை, பாசத்தை அவருக்குத் தேடித் தந்தது.

அவரது இழப்பை ஈடு செய்வது என்பது மிகவும் கடினம்.

ஆழ்ந்த நாட்டுப் பற்றுடையவராகவும், அரசியல் மேதையாகவும் அவர் விளங்கினார்.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாவின் நாட்டுப்பற்றைப்பற்றி உள்துறை அமைச்சர் குறிப்பிட்டுக்காட்டி இருக்கிறார்கள். மக்களுக்கு முழுதுமாகத் தம்மை ஒப்படைத்து விட்டதால் மட்டுமே அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது தியாகம் பேரும் புகழும் பெற்றது என்பதைச் சுட்டி இருக்கிறார் சவாண்.

காமராசர் "முதலமைச்சராக அண்ணா இருந்து ஆற்றிவந்த தொண்டினை குறுகிய இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாகவே இழக்க நேர்ந்தது துரதிருஷ்டவசமானது" என்று சொல்லி இருக்கிறார்.

சி. சுப்பிரமணியம் அவர்களும் இதே கருத்தினைக் கூறி இருக்கிறார்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்களோ,

"எது நடக்கக் கூடாதோ, அது நடந்து விட்டது; எதிர்காலம் இருளடைந்து காணப்படுகிறது. நாலு கோடித் தமிழர்களுக்கும் இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்"

என்று தமிழகத்தின் இருண்டுவிட்ட சூழ்நிலையை எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இவர்கள் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலிருந்தெல்லாம் புகழ்ப் பெற்ற பல தலைவர்கள் இரங்கற் செய்தி தெரிவித்திருக்கிறார்கள்.

அவற்றையெல்லாம் தொகுத்துப் படிக்கின்றதால் மட்டுமே பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய ஆற்றலினை அகிலம் உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதில்லை.

ஒரு அரசியல் கட்சியினைத் தொடங்கி, 1? ஆண்டுக் காலத்தில், அதனை ஆட்சி பீடத்திலமர்த்தி இருக்கின்ற சாதனை ஒன்று போதும்— அறிஞர் அண்ணாவின் ஆற்றலினை எடுத்துக் காட்ட.

ஒரு அரசியல் இயக்கம், தான் நிறுத்திய அத்தனை வேட்பாளர்களையும் தேர்தலிலே வெற்றி பெற வைத்திருக்கிறது என்பது ஒன்று போதும் — அறிஞர் அண்ணா அவர்கள் தம் கொள்கையின் சிறப்பை உணர்த்துவதற்கு.

இவையெல்லாம், இவ்வையம் தோன்றி மனித குல வரலாறு ஒழுங்குபடுத்தப்பட்டு, இப்படி இப்படி வாழவேண்டும் என்று வகை தொகை வகுக்கப்பட்ட நாள் முதல், ஒரு அரசியல் கொள்கையின் கீழ் முறைப்படுத்தும் நாள்

தோன்றிய காலம் முதல், பூவுலம் சந்திக்காத புதுமைகள்!

வரலாறு வியக்கிறது இப்புதுமைகளைக் கேட்க! வரலாற்றாசிரியர்கள் திகைத்திருக்கிறார்கள் உவமை காட்டி எடுத்துரைக்க!

இத்தனைப் பெயருக்கும், புகழுக்கும் காரணமாய் அமைந்திருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தம் அறிவாறறலும், பண்பாற்றலும் ஒருசேரப் பெற்ற ஒருவரை இனி இந்த மனித சமுதாயம் சந்திக்க முடியுமா? என்று எண்ணிப் பார்க்கிற போதில், வினாக்குறி வினாக்குறியாகவே நின்று விடுகிறது.

ஒரு காந்தியடிகள் பிறந்து வளர்ந்து, இந்தியத் துணைக்கண்டம் முழுமையையும் தன் சுட்டு விரல் அசைவின் கீழ் கொண்டு வந்து நிறுத்தினார் என்றால், அவருக்குப் பின், அவரது பெயரை நினைவு கூறும் வகையில் பேரறிஞர் அவர்கள் வாழ்ந்து காட்டியபோது, காந்தியடிகள் மறையவில்லை என்று அகமகிழ்ந்தோம்! அறிஞர் அண்ணா நீள்துயில் கொண்டுவிட்ட பின்னர், அவரது பெயர் நிலை பெறத்தக்க வகையில் எடுத்துக் காட்டுக்கு மனிதர் எவரும் பிறந்திருக்கவில்லை. பெயரை நினைவு கூறத்தக்க வகையில், அண்ணாவின் சாதனைகள், பேச்சுக்கள், எழுத்துக்கள் மட்டுமேதான் எஞ்சி இருக்கின்றன என்று எவரும் ஒரு முடிவுக்கு வரும் நிலைமையை யாராலும் மறுக்க முடியாதுதான்! அண்ணாவின் புகழுக்கு இணை அண்ணா ஒருவர்தான்! அண்ணாவின் ஆற்றலுக்கு இணை அண்ணா ஒருவர்தான்! அண்ணாவின் சிந்தனைக்கு இணை அண்ணா ஒருவர்தான்! அண்ணாவின் பண்பாட்டுக்கு இணை அண்ணா ஒருவர்தான்!

எனவேதான் பேரறிஞர் அண்ணாவின் மறைவை, உண்மையிலேயே ஈடு செய்யப்பட முடியாதது என்று அறிஞர்கள், தலைவர்கள் அனைவரும் கூறுவது சாலப் பொருந்துவதாகிறது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்துக்கு மேலாக, இந்த இதழ் 'திராவிட நாடு' என்று பெயர் பெற்றிருந்த காலத்திலும், 'காஞ்சி' என்று பெயர் மாற்றப் பெற்ற காலத்திலும், எந்த ஒருவருடைய எண்ணங்கள் எழுத்துக்களாக வடிக்கப்பட்டு தமிழகம் பூராவும் தட்டி எழுப்பப் பட முழுமுதற் காரணமாக அமைந்திருந்ததோ—

எந்த ஒருவருடைய எழுத்துக்களைப் படித்துப் படித்து பலபேர் தம்மைத் தலைவர் என்ற தகுதிக்கு உயர்த்திக்கொள்ளும் வாய்ப்பு உருவாயிற்றோ—

எந்த ஒருவருடைய எழுத்தினால் நாடு, தன்னை உணர, புறஉலகை உணர, உணர்ச்சிபெற, செயல்பட புகழ்பெறக் கூடிய ஆற்றலினைப் பெறும் பேற்றினைப் பெற்றதோ—

அந்த ஒருவர் இன்றில்லை. காலம் அவரை வரலாறாக்கிவிட்டது. காலமெல்லாம் கண்ணீர் சோரும் ஒரு நிலை உருவாகிவிட்டது.

எந்தக் கோணத்திலிருந்து எழுதினாலும் பேரறிஞர் தம் ஆற்றலினை முழுமையாக எடுத்துக் காட்டிவிட்டதாக நம்ப முடியவில்லை. எவராலும் முடியும் என்றும் ஒப்ப முடியவில்லை.

எவராலும் ஆறுதல் பெற முடியவில்லை. ஆறுதல் மொழிகளால் தேறி, ஆக்கம் பெறும் நிலையும் வழியும் தோன்றவில்லை.

இந்த ஒரே யொரு ஏட்டின் மூலம், எழுத்தாற்றல் கொண்டு யுகப் புரட்சி செய்த ஏந்தலின் மறைவை, இந்த இதழே தாங்கிவரும் துர்ப்பாக்கியம், உண்மையிலேயே மிகப் பெரியது. ஏற்படக் கூடாதது! பெரியார் அவர்கள் சொல்லி இருப்பதுபோல் நடைபெறக் கூடாதது நடைபெற்று விட்டது.

சாவெனும் சண்டாளத்தனத்தின் கொடுமை உலகுக்குப் பொதுமை என்பதை நாடு உணர்ந்து கொண்டிருந்தாலும், பேரறிஞர் அண்ணாவைப் போன்றவர்கள் அக்கொடுமைக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகவே, நாடெங்கும் ஒருமுகமாக வழிபாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்றே நம்புகிறோம். அதுபோன்ற வழிபாடுகளால் கூற்றுவனின் கொடுங்கரங்கள் வலிகுன்றிப் போகவில்லை என்றே தெரிகிறது.

எதையும் தாங்கும் இதயங் கொண்ட பேரறிஞரே சாமியின் கொலைச் செய்தியினைத் தாங்க முடியாமல் தீச்சூடு உணர்வு கொண்டார் என்றால், மிக மிக மிகச் சாமான்யர்களான நம்மால் மட்டும் தாங்கிக்கொள்ள முடியுமா?

என்றாலும் தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும்! தாங்கிக் கொள்வோம்! நல்லோரின் ஆறுதல் வார்த்தைகள், தேறுதல் மொழிகள் உறுதுணையாக இருக்கின்றன. பல லட்சக் கணக்கான மக்கள் பின்னே இருக்கிறார்கள் என்ற தெம்பு இருக்கிறது! அதனால் மட்டுமே தாங்கிக் கொள்கிறோம்.

எங்கள் தெய்வமே! எங்கள் ஏந்தலே!
எங்கள் வாழ்வே! எங்கள் வழிகாட்டியே!
உங்கள் ஆன்மா சாந்தியடைவதாக!

என்று எல்லோரையும் போலவே 'காஞ்சி'யும் கூறி, ஆறுதல் பெறுகிறது.

# இரண்டாவது அமைச்சரவை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது அமைச்சரவை, கடந்த கிழமை, பொதுப்பணித்துறை அமைச்சராகவிருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களது தலைமையிலான முதல் அமைச்சரவையிலிருந்த அமைச்சர்களில் நாவலர் நெடுஞ்செழியன் நீங்கலாக, பிற எல்லா அமைச்சர்களும், புதிதாக நால்வரும் பங்கேற்று மொத்தம் 11 பேர்களைக்கொண்ட அமைச்சரவையாக இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது.

புதிய அமைச்சரவையில், புதிய அமைச்சர்களாக, திருவாளர்கள் ப. உ. சண்முகம், எஸ். பி. ஆதித்தன், சே. வி. சுப்பையா, ஓ. பி. ராமன் முதலானோர் பங்கேற்றுள்ளனர்.

அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் பிற அமைச்சர்களுக்குத் தரப்பட்டிருந்த இலாகாப் பொறுப்புக்களில் சிலபல மாறுதல்களோடு இரண்டாவது அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

கலைஞர் கருணாநிதி அவர்களது கழகப் பற்று பற்றியும், செயல் திறன் பற்றியும், அறிவாற்றல் பற்றியும் கழகம் என்றுமே ஐயப்பாடுற்றதில்லை.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு, கலைஞர் அவர்கள் என்றுமே பக்கத்துணையாக இருந்துவந்திருப்பவர். கழத்தில் முன்னணியில் உள்ள மற்ற எல்லாரையும் போலவே, கழக வளர்ச்சியிலும், நலனிலும் பங்கு குறைந்தவரல்ல என்று பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே பாராட்டப்பெற்றிருப்பவர் கலைஞர் அவர்கள்.

கழகக் கடவுளின் மறைவுக்குப் பிறகு, கழகம் கலகலத்துப்போகும்; குத்துவெட்டுக்கள் நிகழும்; கூச்சலும் குதியாட்டமும் நடைபெறும் என்றெல்லாம் மனதுக்குள்ளேயும், சில வேளைகளில் வெளிப்படையாகவும் கூட பேசி வந்திருப்போர் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

முதலமைச்சர் தேர்தலில், கலைஞர் கருணாநிதி அவர்கள் காட்டிய ராஜதந்திரப்போக்கும், நடத்தி முடித்த விதமும், ஏதோ ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றத்தைதான் தந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அரசியல் வித்தகத்தில் தன் ஆற்றல் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதனைப் புலப்படுத்திக் காட்டுவதாக முதலமைச்சரின் தேர்வு நடைபெற்று முடிந்திருக்கிறது.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறை[illegible]போன் என்று விமர்சிக்கப்படும் கடவுள் [illegible]கூட சில பல வேளைகளில் காய்ந்து கொள் [illegible]த் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண் [illegible]ன் மனிதன் எனப்படுபவன். இந்த மனிதர் [illegible], எல்லா மனிதர்களும், எல்லா வேளைகளி[illegible]லா வகையிலும் முழுமை பெற்றவனாக எந்த [illegible]லும் தன்னை ஆக்கிக்கொள்ள முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருவரே இதற்கு [illegible]துவிலக்காக இருந்திருக்கக்கூடும். பேரறிஞர்அண்ணா அவர்கள் தம் எந்த ஒரு முடிவையும், அது தம் முடிவாக—யதேச்சாதிகாரமான முடிவாக — இருக்கும்படி இடங் கொடுத்ததில்லை. எந்த ஒன்றும் தம் தம்பியர்களது முடிவாக இருக்கட்டும் என்ற ஜனநாயகச் சித்தாந்தத்துக்கு உரிய மதிப்பளிப்பவராக நடந்து கொண்டு, எந்த ஒன்றிலும் மற்றவர்களது கருத்தினையும் கலந்துகொண்டே செயல்பட்டு வந்திருக்கிறார். இவையும், இவை போன்ற வேறு பல அமானுஷ்யமான பண்பாடுகளும், குணச் சிறப்புக்களும் மாற்றார் திகைக்குமளவுக்குப் பேரறிஞரிடத்தில் இருந்தவையே இவற்றுக்குக் காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

கலைஞர் கருணாநிதி அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் அடியொட்டிச் சென்றொழுகுபவர் என்ற பெருமையை ஏற்கெனவே தட்டிப் பறித்துக் கொண்டிருப்பவராவார். முதலமைச்சராகி விட்ட பின்பு, இனியும் அந்தப் பெருமைக்குப் பெருமை சேர்ப்பார் என்ற நம்பிக்கை கழகத் தோழர்களுக்கு நிச்சயம் உண்டு.

கலைஞர் கருணாநிதி அவர்களால் இனி கழகம் மேலும் வலிவு பெறும் என்பது மட்டுமல்லாமல், நாட்டுக்குப் பேரறிஞர் தம் பெரு இதயம்போல நல் வாழ்வு சித்திக்கக்கூடிய திட்டங்கள் உருவாக்கப்படும்—செயல்படுத்தப்படும் என்று உறுதியாக நம்பலாம்.

யார் யார் அமைச்சர்களாகி இருக்கிறார்கள் என்ற சர்ச்சைக்கு யாரும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளத் தேவையேதுமில்லை. அமைச்சர் பொறுப்புக்கு வந்திருப்போர் தம் பேராற்றலை நாட்டின் நலிவு தீர்க்க இந்தந்த முறையில் செயல்படுத்துகிறார்கள் என்ற சர்ச்சை மூலமே சீரியமுறையில் அவர்களோடு ஒத்துழைப்பவர்களாக மக்கள் இருக்க முடியும்.

எனவே, கலைஞர் கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக்கொண்டு அமைந்திருக்கும் தி. மு. க. வின் இரண்டாவது அமைச்சரவை, சீரோடும், சிறப்போடும் செயல்படும் விதத்தில் ஒத்துழைப்பு நல்க வேண்டியது கழகத்தவரின் தலையாய கடமை—பொது மக்களின் நீங்காக் கடமை என்று கூறுவது பொருந்தாததாகாது.

★

## "இதயத்தில் ஓர் ரோஜா"

'காஞ்சி' பொங்கல் மலரில், புதிதாகத் தொடங்கப்பெற்ற முல்லை சத்தியின் "இதயத்தில் ஓர் ரோஜா" என்ற தொடர்கதை, அடுத்த இதழிலிருந்து மீண்டும் தொடர்ந்து வரும்.

—ஆசிரியர்,

# காலதேவன் நகைக்கிறார்!

—எம். எஸ். நீலகண்டன்—

நீலவானிலே அந்திதேவன் குரல் கொடுத்தான்.

புள்ளினங்கள் தங்கள் கூடுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கும் நேரம்.

கறவை இனங்கள் தங்கள் கழுத்து மணி ஒலி எழுப்பத் தங்கள் கொட்டில் நோக்கித் தாவிவரும் வேளை!

செவ்வானத்தின் அந்திச் சிவப்பு தண்ணீரிலே பட்டுப் பளபளத்துக் கூம்பிய தாமரைகளைச் செவ்வல்லிகளாக மாற்றிக்கொண்டிருக்கும் விந்தை வேளை!

உயிரினங்கள் யாவும் தங்கள் தங்கள் இயல்புப்படி இயங்கிக் கொண்டிருந்த நேரம்!

நீல வானிலே அந்திதேவன் மீண்டும் குரல் கொடுத்தான்.

இம்முறை அவன் குரல் சற்றே அச்சம் தரும் வகையில் ஒலித்தது.

புள்ளினமும், கறவை இனமும், மலரினமும் அசையாது நின்றன

அது ஒரு விந்தை நேரம்!

பறவைகள் வான வீதியிலே அப்படியே சிறகை விரித்தபடி நின்றன;

தாமரையின் முகம் பாதி மூடியபடி இளமைக்கும் முதுமைக்கும் இடையே உள்ள கோலம் காட்டி நின்றது;

செவ்வல்லியின் உடலிலே சிவப்பும் வெண்மையும் கலந்து ஒரு தெய்வீகக் கலவையாகக் காட்சி தந்தது;

காற்றும் அசையாது நின்றது!

ஆனால்—

மனிதன் மட்டும் அசைந்து கொண்டிருந்தான்!

அவன் காதில் அந்திதேவனின் குரல் விழவேயில்லை!

ஏனெனில்—

அவன் படைப்பு அப்படிப்பட்டது.

நல்லனவைகளை என்றென்றைக்குமாக வெறுத்து ஒதுக்கித் தீயனவற்றினுள்ளே நல்லதைத் தேடி அலைபவன் அவன்.

அவன் காதில் இயற்கையின் குரல் விழாததில் வியப்பொன்றுமில்லை!

மீண்டும் அந்திதேவன் குரல் கொடுத்தான். இம்முறை அவன் குரல் மிகக் கடுமையாக ஒலித்தது.

அது மனிதனுக்காக!

ஆனால், மனிதன் தனக்குத் தானே போர்த்திக் கொண்ட மாயை எனும் இருளில் மூழ்கியபடி நடந்து கொண்டிருந்தான்.

புட்களும், பறவைகளும், தாவரங்களும், மனிதனின் அலட்சியத்தைக் கண்டன.

அவற்றின் முன்னே கோபக்கனல் வீச நிற்கும் அந்தி தேவனின் செம்முகத்தையும் கண்டன.

அவற்றின் உடல் நடுங்கியது!

ஆனால் மனிதனோ—

இவை ஒன்றையும் இலட்சியம் செய்யாது. இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கிறது என்பதையே அறியாதவனாகப் பூமியில் நடந்துகொண்டிருந்தான்.

பாவம் மனிதன்!

இயற்கை தனக்கு விதிக்கப் போகும் தண்டனையை அவன் உணரவேயில்லை!

தான் குற்றம் செய்கிறோம் என்ற உணர்வே இன்றி அவன் குற்றவாளியாகும்போது, தண்டனையையே எதிர்பார்க்காததில் வியப்பென்ன?

குற்றம் செய்யும் உணர்வுக்குச் சிறிது சிறிதாக அடிமைப்பட்டபின் அக்குற்ற உணர்வே அவன் வாழ்வு முழுவதும் ஆக்ரமித்துக் கொண்டுள்ளபோது—நேர்மை என்ற ஒன்றைப் பற்றிச் சிந்திக்கத்தான் அவனுக்கு நேரமேது!

ஆயினும்—

அம் மனித சமுதாயத்துள்ளும் ஒரு சில அபூர்வப் பிறவிகள் இருந்தன!

குற்றம் செய்யும்படியான குலத்தில் பிறந்துள்ளோமே என்று குமையும் குன்றுகள் அவை!

நேர்மை எனும் நிலத்திலே தீமைக் காளான்களை ஒழிக்கப் பாடுபடும் நன்னெஞ்சங்கள் அவை!

அவற்றின் செவிப் புலனுக்கும் அந்திதேவனின் குரல் கேட்கவில்லை.

ஆயினும்—

அவற்றின் உள்மனம் மட்டும் ஏதோ ஒன்று நேரப் போகிறது என்று எச்சரித்துக்கொண்டு இருந்தது.

அந்த எச்சரிக்கை தந்த உணர்வு காரணமாக அவை மன அமைதி இழந்து தவித்தன.

## "விற்பனையாளர்களுக்கு"

கடந்த பொங்கல் மலருக்குப் பிறகு இதுவரையில் இதழ்கள் வெளிவரவில்லை. முன்னைய அறிவிப்புப்போல, 9—2—69, 16—2—69-ம் நாளைய இதழ்கள் பேரறிஞர் அண்ணு அவர்களது மறைவின் காரணமாக வெளிவரவில்லை என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிருேம்,

—உரிமையாளர்.

செய்த குற்றத்திற்கு வருந்தலாம்; மாற்றுத் தேடலாம்!

செய்யாத குற்றத்திற்குப்—பெறப்போகும் தண்டனைக்கு என்ன செய்வது?

பாவம்! வெளியிடவும் துணிவின்றி, நேர்ப்படுத்தவும் திறனின்றி உள்ளுக்குள்ளேயே குமைந்தன.

ஏனெனில்—

அவை என்னதான் முயன்ருலும் அவற்றின் முயற்சி 'நாய் வாலை நிமிர்த்த முயன்ற கதை'யாகவே முடிந்தது.

உண்மையில் தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவது போன்று நடிப்பவனை எழுப்ப முடியுமா?

* * *

'எனதருமைப் படைப்புகளே! உலகின் கண் நான் படைத்த உயிரினங்களுள் நீங்களே விசுவாச மிக்கவர்கள்! ஆறறிவும் படைத்துள்ள மனிதனுக்கு எனது குரல்கூடக் காதில் விழிவில்லை. அறியாமை அவனது காதை அடைக்கிறது. ஆயினும், என்ஞல் அதைத் திறக்கமுடியாது. அதற்காக நான் அவனை விட்டுவிடப்போவதில்லை.

"அவனது செவிகள் திறக்கப்படவேண்டும்; கண்கள் பார்வைபெற வேண்டும்; வாய் பேசும் சக்திபெற வேண்டும்.

"இவற்றைப் பெறுவதற்காக அவன் தனது விலையுயர்ந்த உடைமைகளையும் இழக்கச் சித்தமாயிருத்தல் வேண்டும். அவஞல் அதற்கு உடன்பட முடியுமா என்று அவனைக் கேட்டு வாருங்கள்" அந்திதேவன் கட்டளையிட்டு மறைந்தான்.

திகைத்துநின்ற உயிரினங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கின!

பறவைகள் தங்கள் கூடுகளில் புகுந்து கொண்டன

கறவைகள் கொட்டில்களில் அடைபட்டன;

செவ்வல்லி முகம் வானிலே மலர்ந்து சிரித்தது;

வெண்ணிலா வானிலே உலா வரத்தொடங்கியது!

கிளி தன் கூண்டில் இருந்தபடி கத்திற்று;

'மனிதா......மனிதா......'

மனிதனும் வந்தான். அதன் குரல் அவன் உட்செவிக்கு எட்டவில்லை. கூண்டிற்குள்ளே பழங்களைப் போட்டுவிட்டுத் திரும்பிஞன்.

குயில் கூவிற்று;

பெண் தனது வீணையை மீட்டிஞள்! குயிலின் குரல் மறைந்து போயிற்று;

கொட்டிலிலே மாடு கத்திற்று;

மனிதன் அதற்குப் புல் வழங்கிஞன்,

அல்லி முக மலர்ந்து அழைத்தது;

அவன் கண்டு ரசித்தான்,

மல்லிகை மணம் பரப்பிற்று;

பெண் அதைப் பறித்துத் தன் கூந்தலிலே சூடிக் கொண்டாள்,

இயற்கையின் ஒவ்வொரு அழைப்பினுக்கும் மனிதன் ஒவ்வொரு வகையில் பதிலிறுத்தான். அதன் அழைப்பில் பொதிந்திருந்த உண்மை என்னவென்றே அவன் உணர்ந்து கொள்ளவில்லை,

அது அவனுக்கு என்றே இயற்கை அமைத்துள்ள விதி!

துன்ப நேரத்தில் ஐம்புலனும் அடைபட்டுப் போகும் உணர்வு படைத்தவன் மனிதன்!

இயற்கை தனக்கென ஒதுக்கி வைத்துள்ள துன்பம் பற்றி அவன் கவலையுறவில்லை,

ஏனெனில்—

அதுபற்றி அவன் அறியமாட்டான்,

அவன் கண்டதெல்லாம் உழைப்பதும், உண்பதும் உறங்குவதுமே!

உழைப்பு என்ரு சொல்வது?

'ஏய்த்தல்' என்ற சொல்லினுக்கு 'உழைத்தல்' என்று புதுப் பெயர் கொடுத்தவன் அவன்!

தனக்கு 'அறிவு' என்ற ஒன்றை வைத்த அந்த 'அதை' அவன் அறவே மறந்துவிட்டான்.

அந்த, இயற்கை என்று ஒன்று இருப்பதே அவனுக்குத் தெரியாது!

அவன் தனக்குத்தானே வளர்த்துக்கொண்ட செய்கைக் குழப்பங்களில் முற்றிலுமாக மறைந்து, இயற்கை என்ற ஒன்று இருப்பதையே மறந்துவிட்டான்

பேதை மனிதன்!

* * *

மனிதனுக்கு உணர்வூட்டுவதில் மற்ற உயிரினங்கள் அடைந்த தோல்வியை உணர்ந்தார் தேவன்.

அவரதுமனதில் ஒரு ஒளி பளிச்சிட்டது.

மனிதனின் உயிரான ஒரு பொருளைப் பறித்துக் கொண்டுவிடுவோம்; அதன் பிறகாவது அவன் திருந்துகிருஞபார்ப்போம் என்று எண்ணிஞர் தேவன். ஆஞல், எங்கு தேடியும் மனிதனின் உயிருக்கும் மேலாக அவன் போற்றும் 'பணம்' என்ற ஒன்றைத் தவிர வேறு எதுவும் அவர் காணவில்லை.

தேடித் தேடி தேவனும் அலுத்துப்போஞர்.

தீடீரென அவர் கண்கள் பளபளத்தன!

அது வெற்றியின் அறிகுறி!

ஆம்...அவர் கண்டுபிடித்துவிட்டார்...

மனிதனின், தன் உயிரே போல் போற்றிவரும் ஒரு பொருள் அவர் கண்களில் தென்பட்டது.

அதுவும் 'அவனே' தவிர வேறல்ல!

அந்த 'அவன்' அத்தனை மனிதரிலும் வேறுபட்டவன்.

தனது சொல்லாலும், எழுத்தாலும் தனது நாட்டு மக்களை மயங்கவைத்தவன் அவன்!

நுண்ணிய மனப்பாங்கும், திண்ணிய உளவலிவும் அமையப்பெற்றவன் அவன்!

அவன் இருந்த இடத்தில் மக்கள் இருந்தனர்;
அவன் சிரித்தால் அவர்களும் சிரித்தனர்;
அவன் அழும்போது அவர்களும் அழுதனர்;
அவன் சொல் அவர்களுக்குத் தேனானது;
அவனைத் தங்கள் உயிரெனப் போற்றினர்;

அவன் எழுத்தில் தங்கள் தேவனையே அவர்கள் கண்டனர்.

ஆயினும்—

அவர்கள் முன்னே விரிந்திருந்த ஒரு மாயத்திரை அவர்கள் கண்ணை மறைத்தது.

அவனது குறிக்கோள்களினூடே தங்களை முற்றிலுமாகக் கொண்டுசெல்ல அவர்கள் இயலாதவர்களாக இருந்தனர்.

அந்த 'அவனை'க்கொண்டு மாந்தர்களை வழிப்படுத்த தேவன் உளம் கொண்டார்.

அப்போது—

அவர் மனதிலும் ஒரு சங்கை உண்டாயிற்று.

அம்மாதிரிப் பலமுறை மனிதனைத் திருத்த அதே முறையை அவர் கைக் கொண்டுள்ளார்.

ஆயினும்—

அவருக்கும் அந்த ஒரு முறையைத் தவிர வேறு வழி ஏதும் தென்படவில்லை.

அவரும் மனிதனுடன் போராடிக் களைத்து விட்டாரோ?

* * *

தேவனின் தூதர் மண்ணுலகில் இறங்கி வந்தனர்—

நிலவு ஒலி அவர்களுக்கு வழி காட்டிற்று.

நட்சத்திரங்கள் அமைத்துத்தந்தபால் வழிப்பாதை மூலம் அவர்கள் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்தனர்.

அவர்கள் மண்ணுலகில்' கால்வைத்த நேரம்!
செவ்வாம்பலின் நிறம் மங்கிற்று;
காராம் பசுவின் கண்களில் நீர் மல்கிற்று;

கிளி கூண்டிற்குள்ளேயே சிறகடித்துப் படபடத்தது;

புரு ஒன்று மேலே எழும்பி வட்டமிட்டு கீழே இறங்க வகையறியாதுத் தவித்தது.

மனிதனின் மனம் அப்போதும் அசையவில்லை.

அவன் தனது முயற்சிகள் வெற்றி பெறும் என்ற பொய் நம்பிக்கையிலேயே மூழ்கி இருந்தான்.

காலதேவனின் தூதர் தூர இருந்தபடியே இவற்றைக் கவனித்தனர்.

அவர்கள் மனதிலும் இரக்கஉணர்ச்சி மேலிட்டது.

மனிதனை மனிதர்'களுக்கு மத்தியில் இனியும் விட்டு வைப்பது கூடாது எனக் கருதினர்.

மனிதன் விண்ணுலகிற்குப் பயணமானான்.

மண்ணுலகில் அவனுக்கென விதித்திருந்த கெடு முடிந்துவிட்டது.

இனி அவன் விண்ணுலகின் நுண்ணிய துளைகளின் வழியே மண்ணுலகிற்குத் தனது ஆசிகளை வழங்குவான்.

அவன் தனது சகோதர'மனிதர்களுக்கென அமைத்துக் கொடுத்த கொள்கைகளே அவர்களுக்கு வழி காட்டும்,

சகோதர மனிதர்கள் உணர்ந்து கொண்டனர்.

அவனது மறைவால் தங்களுக் கிடையே ஒரு இடம் நிரந்தர சூனியமாகி விட்டதை உணர்ந்து கொண்டனர்.

அவர்கள் துக்கம் ஆற்ருெணுமல் பெருகியது.

விண்ணுலகின் மேகக் கூட்டங்களினூடே அவன் தனது கடைசிச் செய்தியை அறிவித்தான்.

"அருமைச் சோதரரே! நமது மண்ணுலக வாழ்வைப் பொன்னுக்க நினைத்த எனது கொள்கைகள் என்றென்றும் உங்கள் மனதில் நிலவுவதாகுக! உங்களைச் சூழ்ந்துள்ள அறியாமை இருள் இனிமேலாவது உங்களைவிட்டு விலகுவதாகுக!''

மண்ணுலகமாந்தர்க்கு அவன் குரல் எட்டவில்லை.

அவர்கள் தங்களுக்குத் தாங்களே அமைத்து கொண்ட சோகக் கூட்டினுள் அடங்கியிருந்தனர்;

தங்கள் கண்ணீர் அமைத்த காலக் கடலுள் தாங்களே அமிழ்ந்திருந்தனர்.

இது கண்டு—

காலதேவன் நகைத்தார்.

மனிதனின் அறியாமையை எண்ணி எண்ணி நகைத்தார்.

தன் உலகிற்குத் தான் அழைத்துக் கொண்ட மனிதன் மூலமாகத் தந்த கொள்கைகளைச் சரிவரக் கைக்கொள்ளாத மனிதரின் அறியாமையை எண்ணி நகைத்தார்,

ஒவ்வொருமுறை மனிதனைத் திருத்த முயலும்போதும் அவனுக்காக ஒரு உண்மை மனிதனைத் தாம் அழைத்துக் கொள்ளவேண்டி வரும்போதெல்லாம் அவர் அவ்வாறுதான் சிரிக்கிறார்.

அது அவர் வழக்கம்—

ஏனெனில்—

அவருக்கு மனிதனைப் போன்று அழத் தெரியாது!

## மாற்ருர் கூற்றுக்குச் செவிசாய்க்காதீர்



"மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்மீது எனக்கு என்றைக்கும் தனி மதிப்பு உண்டு; இருபத்தைந்தாண்டுக்காலம் அவருடன் நான் நெருங்கிப் பழகியவன்; அவருக்கும்—எனக்கும் இன்றளவும் ஒரு சிறு கருத்து வேற்றுமைகூட ஏற்பட்டதில்லை; இனி என்றும் ஏற்படப்போவதுமில்லை.

"எதிரிகளின் பிரசாரத்தை நம்பவேண்டாம்; மாற்றுக் கட்சியினரும், பத்திரிகைகளும் இப்பொழுது எழுதுவதெல்லாம் நம்மீதுள்ள நல்லெண்ணத்தால் அல்ல—நம்மைப் பிளவுபடுத்தி நமது கட்சியில் சரிவு ஏற்படுத்திவிடலாம் என்ற தப்புக் கணக்குப் போட்டுத்தான் அப்படிச் செய்கிறார்கள்.

"எனவே, நமது கழகத்தையும்—கழக அரசையும் கட்டிக் காக்க ஒவ்வொருவரும் உறுதியுடன் செயல்பட வேண்டும்''

—நாவலர், நெடுஞ்செழியன்

With the best compliments from:

**Shantidev General Supply Syndicate,**

**MADRAS-7.**

With the best compliments from:

**Ayyappan Industries**

**TIRUPUR.**

# அழுதுகொண்டே இரு!

தமிழத்தாயே! தமிழத்தாயே! தலைமகனை இழந்து தவிக்கின்ற உன் தவிப்புக்கு எப்படியம்மா என்னால் ஆறுதல் சொல்ல முடியும்?

நாவரண்டு கிடக்கிறது! கண்கள் பஞ்சடைந்து கிடக்கின்றன! இதயம் துடிப்பொழிந்து இருக்கிறது. நாடித்துடிப்புக்கூட நலிவுற்று வருகிறது தாயே! இது என் நிலை! தாயே, மகனை இழந்த உன் நிலைக்கு என்னால் முடியுமா ஆறுதல் கூற?

கோர நர்த்தனத்தின் கொடுமைகளால், உன் பொன் மேனியில் புண் உண்டாக்கப்பட்டபோதெல்லாம், அந்த மகனின் சிரித்த முகம் கண்டு சீழ்நோயின் கொடுமை மறந்திருப்பாயே, தாயே!

இனியும் உன் முகத்திலே புன்னகை மலருமா? பொலிவு பொங்குமா?

தாயே! உனக்குத் தெரியுமா? அன்றோர் நாள்! இந்தி யெனும் உருவத்தில், உன் உயிரைக் கொண்டுசெல்ல வந்த கூற்றுவனின் கொடுங்கரங்களை, வலிகுன்றச் செய்து வந்த வழியே துரத்திவிட்டாரே அந்த தலைமகன்! அந்த மகனையே இன்று அபகரித்துக் கொண்டானே இந்தக் கூற்றுவன்! அம்மா! இனி உனக்குப் பாதுகாப்பு உண்டா?

பேச்சிலும், மூச்சிலும், எழுத்திலும், எண்ணத்திலும் ‘தமிழ், தமிழர், தமிழ் நாடு’ என்றல்லவா தாயே இருக்கக் கண்டிருக்கிறேன்!

ஒரு ஆங்காரப் பார்வை உண்டா? அகந்தை நோக்குண்டா? ஆத்திரப் பேச்சுண்டா? ஆகாத சொல்லுண்டா?

வேண்டுதல் வேண்டாமைப் பற்றும் இல்லை; வேண்டியவர் வேண்டாதார் வேற்றுமையு மில்லையே!

வேறெதனால் கூற்றுவனின் வன்கண்மை வாழ்வைப் பறித்துக் கொண்டது தாயே!

வந்த வேலை முடிந்துவிட்டதா? தந்த கெடு முடிவுற்றுப் போயிற்றா?

புகழ்த் தாய் பொறுமைப்பட்டுப் போனாளா? பூமாதா காதலித்து விட்டாளா?

காதில் விழுகிறதா தாயே, கதறலின் அவலம்? ‘தாயில் தூஉவாக் குழவிபோல’ என்று புறம் புலம்பும் நிலைமை காதில் விழுகிறதா அம்மா?

அம்மா! நீ என்ன செய்வாய்! நீயும் அழுகிறாய்! நானும் அழுகிறேன்! நாடும் அழுகிறது! அழுவதற்காவது எனக்கு அனுமதி வேண்டும் தாயே!

ஏதேதோ நினைக்கிறேன்! ஏதேதோ பிறக்கின்றன! ஏதேதோ புலம்புகின்றேன்! புலம்பத்தான் முடிகிறது! புலம்பலுக்குப் போய் பொருள் தேடலாமா?

கண்கள் மறைகின்றன—கண்ணீரால்! அறிவு தடுமாகிறது—அது ஏன் தாயே!

அறிவும், அன்பும், பண்பும், பாசமும், பேச்சும், எழுத்தும், சொல்லும், செயலும் எல்லாமாகிய தலைமகனைப் பறிகொடுத்து விட்டதாலா?

சொல் தாயே! சொல்! சொல்ல முடியவில்லையா! சரி! நீயும் அழு! அழுதுகொண்டே இரு!

—திருவாரூர் முத்துராமன்’



# ஓய்வுபெறச் சென்றாரோ?

தேன் பொதிகைச் சாய்ந்ததுவா?

தென்றலிலே அசைந்தாடி சிரித்து நின்ற முல்லை மலர் செந்தீயின் வாய்ப்பட்டுத் தீய்ந்ததுவா?

அந்திவரும் தென்றலினில் அசைந்துவரும் குயில் குரல்தான் ஆசைதீர வாய்ஒலித்து ஓய்ந்ததுவா?

மண்ணோடும் விண்ணோடும் மதிகொண்டல் கதிரோடும் மலைகடலும் நிலைமாறி மாய்ந்ததுவா?

என்ன சொல்லி எம் அண்ணன் இறந்துவிட்டான் என்பதனை எவ்வாறு எடுத்துரைக்க நான் முயல்வேன்?

தேன்கூடு உடைந்ததென்று சொல்வேனா?

செந்தமிழின் மொத்தஉரு தேர்போல அசைந்து வந்து தெருமுனையில் அச்சொடிந்து நின்றதென்று சொல்வேனா?

பால்சேர்த்த தேன்போன்று பண்ணிசைத்த யாழொன்று பழுதுபட்டுப் பாதையிலே புரண்டதென்று சொல்வேனா?

பாசநிழல் தந்தவண்ணம் படர்ந்து நின்ற ஆலமரம் பாவிகளின் கண்பட்டுப் பட்டதென்று சொல்வேனா?

எதைச் சொல்லி நானழுவேன்?

எப்படி இதை உரைத்திடுவேன்?

முக்கனியின் சுவையெனவே முத்தமிழைச் சிந்தி வந்த மூக்கடைத்தக் குரலையினிக் கேட்பேனா?

தம்பிக்கு எனத்தொடங்கி தனக்குரியப் பாணியினில் தந்துவந்த எழுத்தையினிக் காண்பேனா?

நாவன்மை கொண்டநலம்; நல்லகுணம்; வெள்ளை மனம், நாடிசென்று எங்குயினி பார்ப்பேனோ?

துணிவோடும் பணிவோடும் சுவையோடும் கனிவோடும் சொல்லுகின்ற நயத்தையினிச் சுவைப்பேனோ?

என்னசெய்வேன்? எங்குறுவேன்? யாரிடம்நான் கேட்பேனோ? எங்கேதான் எங்கண்ணன் சென்றானோ?

நாளெல்லாம் உழைத்ததினால் நலங்குறைந்தக் காரணத்தால் ஓய்வுபெற மண்ணடியில் நாடிச்சென்று படுத்தானோ?

விண்முட்டப் புகழ் வளர்த்து மேல்வளர்க்க இடமின்றி விரைவாக மண்ணடியில் இடந்தேடிச் சென்றானோ?

என்னுடைய மக்கட்கு இன்னுமென்ன செய்திடலாம் என்றெண்ணி சிந்தனையால் இமைமூடி உள்ளானோ?

நானில்லா நேரத்தில் எனைப்பற்றி மக்களெல்லாம் என்னசொல்லிப் புகழ்கின்றார் எனக்கேட்க விழைந்தானா?

என்ன சொல்லி அமைதியினை என்மனதில் ஏற்படுத்தி எப்படித்தான் ஆறுதலை இங்குபெற முயல்வேனோ?

ஆடிவரும் காற்றெல்லாம் அண்ணனவன் பேச்சினைத்தான் அசைந்து வந்து காதுக்குள் ஒலிக்கிறதோ?

மூடிநிற்கும் மண்கூட மூத்த அண்ணன் முகத்தினைத்தான் முன்காட்டி புன்னகைத்துச் சிரிக்கிறதோ?

ஆழ்கடலின் ஆழமெல்லாம் அண்ணாவின் ஈடில்லா அறிவாழம் போன்றிங்கே தெரிகிறதோ?

வான்கடலுக் குள்ளேயும் வாழவைத்த நம் அண்ணன் வளர்புகழே வாய்விட்டு நகைக்கிறதோ?

எங்கேதான் சென்றானோ? எவ்வழியில் நடந்தானோ? எண்ணத்தில் சீழ்வடிய எப்படித்தான் போனானோ?

கண்ணோடு கருமணிபோல் காத்துவந்த அண்ணன்தான் புண்ணோடு துடிதுடித்துப் புலம்பியழச் சென்றானோ?

விண்ணுக்குப் புகழளித்து விம்மியழச் செய்துவிட்டு மண்ணுக்கு உடலளித்து மண்ணடியில் மறைந்தானோ?

வளிக்குத்தன் குரலளித்து வாழ்ந்துவந்த மூத்த மகன் ஒளிக்குத்தன் சிரிப்பளித்து மண்ணடியில் ஒளிந்தானோ?

ஈரமுள்ள நெஞ்சத்தை நீருக்குத் தானளித்து ஐம்பூதம் பசியாறச் செய்துவிட்டுச் சென்றானோ?

எங்கு சென்றான்? ஏன் சென்றான்? எதற்காக நம்மைவிட்டு எவ்வுலகம் சென்றானோ?

ஒரு வேளை,

அளப்பரிய தன்னுயர்வை அளந்தானே என்றெண்ணி அழுக்காறால் வானந்தான் அண்ணாவை அழித்ததுவோ?

அவன் மனம்போல் பரப்பளவு தன்னிடத்தில் இல்லையெனும் அவமானச் சீற்றத்தால் அண்ணாவை ஒழித்ததுவோ?

தமிழ்நாட்டின் விடிவெள்ளி தங்கமகன் அண்ணாவை தன்னிடத்தில் பதித்திடவே தானழைத்துக் கொண்டதுவா?

வன்முறைகள் தலைதூக்கும் வானவர்கள் ஆட்சியினை நன் முறையில் அரசாள வந்தழைத்துச் சென்றதுவோ?


மண்ணுலகம் சுற்றிவந்து மனமகிழ்ந்த நம் அண்ணன் விண்ணுலகம் பார்க்கட்டும் என்றழைத்துப் போனதுவோ?

எதைச்சொல்லி அழுததுவோ? எதைக்காட்டி அழைத்ததுவோ? ஏமாற்றித்தான் அழைத்துச் சென்றதுவோ?

ஒருவேளை,

பொறுமைக்கோர் பூமியெனும் புகழ் மொழியை மண்ணாக்கி பொறுமைக்கோர் அண்ணாவெனும் போற்று மொழி பெற்றதினால், சிறுமையுற்ற மண்மகளும் சீற்ற

(15-ம் பக்கம் பார்க்க)



# பரிசுச் சீட்டு

பழனியூரான்

முக்காலும் மூன்று முறை என்று சொல்வார்களே, அந்த மூன்று முறையையும் மீறி நான்காவது முறையாக அவள் கையில் ஒரு ரூபாய் பரிசுச் சீட்டு ஒன்றைத் திணித்த முத்து சொன்னார். "நாளைக்கே குலுக்கல் நடைபெறப் போகுது. இது ஒன்னுதான் என் கிட்டே மீதி இருந்தது. வாங்கிவை பொன்னி போனா ஒரு ரூபாய் வந்தா இலட்ச ரூபாய் நூறு ரூபாய்க்குக் குறைவில்லே".

"எனக்கும் வாங்கணும்னுதான் ஆசையாய் இருக்கு அண்ணா. ஆனா, எங்கையிலே காசு இல்லியே? நானோ, இந்த வீட்டிலே வேலை செஞ்சு வயிறு வளர்த்திட்டு இருக்கேன். எங்கிட்டே எப்படிண்ணா காசு இருக்கும்?" பொன்னியும் தன் அவல நிலையை விடாமல் அவரிடம் வற்புறுத்தினாள் அதைக் கேட்ட முத்து கொல்லென்று சிரித்தார்.

"நீயா வேலைக்காரி? நீ இன்னைக்குதாம்மா வேலைக்காரி. ஆனா நாளை இந்த வீட்டுக்கே எஜமானியாக்கும்" என்று யாருக்கும் தெரியாமல் அவள் காதில் கிசுகிசுத்தார்.

"போங்கண்ணா ...... உங்களுக்கு எப்பவும் விளையாட்டுத்தான்" என்றபோது, பொன்னியின் முகம் நாணத்தால் சிவந்திருந்தது.

"பார் பார் வெட்கத்தைப் பாரு. தங்கச்சி நீயே வேண்டான்னாலும், மாணிக்கம் உன்னை விட்டுடுமா? வேலைக்காரி, வேலைக்காரன் வீட்டு மருமகளாத்தாம்மா போகணும். ஆனா நீ பணக்காரர் வீட்டு மருமகளாப் போகப்போறியல்ல........ அதைப் போல அதிர்ஷ்டமும் வேலைக்காரிக்கு வராதுன்னு என்னம்மா நிச்சயமிருக்கு? வச்சுக்கம்மா...நான் மாணிக்கத்துகிட்டே பணம் வாங்கிக்கறேன். இல்லேன்னா உனக்குளெப்பக்கெடைக்குமோ, அப்ப கொடு" என்று கூறி, பரிசுச்சீட்டை அவள் கையில் திணித்துவிட்டு, விடு விடுவென்று நடந்தார் முத்து.

பொன்னி பத்து வயதுச் சிறுமியாய் அனாதையாக, இந்த ஊருக்குள் நுழைந்தபோது முத்துதான் அவள்மீது அனுதாபம் கொண்டு, மாணிக்கத்தின் வீட்டில் வேலைக்காரியாகச் சேர்த்தினார். அவள் மான்போல் குதித்தும், மயில்போல் ஆடியும் மாணிக்கத்தின் பெற்றோர்களிடம் 'நல்ல பெண்' என்று நற்சாட்சிப் பத்திரம் பெற்றதையும், மூன்றாண்டுகளுக்குப்பின், வாலைக் குமரியாக வனப்புடன் விளங்கி மாணிக்கத்திற்குத் தேன்போல் சுவைத்ததையும் அறிந்தபோது, அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாதிருந்தது. தான் பரிவு காட்டிய ஒரு அனாதைப்பெண் ஒரு பணக்காரப் பிள்ளையின் நெஞ்சில் இடம் பெற்றதையும். அவள் பணக்காரர் வீட்டு மருமகளாய்ச் செல்லப் போவதையும் எண்ணி யெண்ணி ஆனந்தமடைந்தார்.

அந்த, ஆனந்த மிகுதியால்தான்' அவர் தமிழக அரசாங்கப் பரிசுத் திட்ட ஏஜண்டாக நியமிக்கப்பட்ட பின், விற்பனைக்காகத் தன்னிடம் வந்த பரிசுச் சீட்டுக்களில் மீதியிருந்த ஒன்றை அவளுக்குக் கொடுத்தார். வேலைக்காரி வேலைக்காரியாகவே, பணக்காரர் வீட்டிற்குள், மருமகளாய் நுழைவதைக் காட்டிலும், எதிர்பாராத விதமாக இலட்ச ரூபாய் பரிசு விழுந்து, அத்தொகையோடு சென்றால் இன்னும் அவளுக்கு மதிப்பும், நல்ல கௌரவமும் கிடைக்குமென்பது அவர் நம்பிக்கை. அதனால்தான் அவள் பலதடவை வேண்டாமென்று, மறுத்த பின்னும்கூட பணமே வாங்கிக்கொள்ளாமல் பரிசுச் சீட்டை மட்டும் அவளிடம் கொடுத்துவிட்டு நடந்தார்.


பொன்னிக்கு, இலட்ச ரூபாய் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை இல்லையென்றாலும், வேலைக்காரியான தன்னை மாணிக்கம் காதலிப்பதே மிகப் பெரிய அதிர்ஷ்டம் என்று கருதினாள். இலட்சரூபாய் தனக்குக் கிடைக்காவிட்டாலும் தான் மாணிக்கத்திற்கு மனைவியாகி மாணிக்கம் மட்டும் தனக்குக் கணவனாகக் கிடைத்துவிட்டால் போதும் என்று விரும்பினாள். மாணிக்கம் தன்னை விரும்புவது இன்னும் அவன் தாய் சங்கரியம்மாளுக்கும் அவன் தந்தை சாமிநாதனுக்கும் தெரியாதென்றாலும் மாணிக்கம் பக்குவமாக அவர்களுக்குத் தெரியப்படுத்தி எப்படியும் அவர்களது சம்மதம் பெற்று விடுவான் என்பதில் அவளுக்கு மிகுந்த உறுதியிருந்தது.

இந்த இனிய நினைவுகளையே மென்று அசை போட்டுக்கொண்டிருந்த அவள் "பொன்னி" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். சங்கரியம்மாள் தலைவாயிலில் நின்று கொண்டிருந்தாள். தோட்டத்தைவிட்டு வேகமாகத் தன்னை நோக்கி வந்த பொன்னியின் சடையைப் பிடித்து உலுக்கிய சங்கரியம்மாள் "ஏண்டி எத்தனை நாளா இந்த கபட நாடகம்?" என்று பலமாகக் குரலெழுப்பினாள். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சாமிநாதர், "பாவி......பாலூற்றின வீட்டுக்கே பாதகம் நெனைச்சுட்டயாடி.........நீ இந்த வீட்டு மருமகளா வரணும்னா உனக்கு நாங்க வேலை கொடுக்தோம்? அனாதைச் சிறுமிபிழைத்துப் போகட்டும்னு ஆதரிச்சா, வேலியே வெள்ளாமையைத் தின்பதுபோல், எம் மகனையே பிடுச்சுடப் பாத்தியடி" என்று குமுறினார்.

இப்பொழுதுதான் பொன்னிக்கு, தங்கள் காதலை மாணிக்கம் தன் பெற்றோர்களிடம் வெளியிட்டுவிட்ட செய்தி தெரிந்தது

"நான்...நான்" என்று திணறினாள் பொன்னி

"நீ வேலைக்காரிதாண்டி...வேலைக்காரி வீட்டு எஜமானியா வந்தா எங்க மதிப்பு என்னடி ஆகும்?"




சங்கரியம்மாள் தன் பிடியை விடாமலேயே பேசினர்.

''எங்களை எவன்டி மதிப்பான்?'' சாமிநாதனும் ஒத்து ஊதினர்.

அப்பொழுதுதான் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்த மாணிக்கம், ஆமாம் பொன்னி, வேலைக்காரி வேலைக்காரனுக்குத்தான் மனைவியாகணும். நான் ஏதேனும் ஆசை வார்த்தைகள் கூறி, ஓரிரு நாட்கள் உன் மனதைக் கெடுத்திருந்தால், என்னை மன்னிச்சுடு'' என்று கூறினன். அவன் பேசியதைக் கேட்டதும், பொன்னிக்கு அவனை யறியாமலேயே ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது.

''நீங்களா இப்படிப் பேசுறீங்க? என் காதலைப் பெறுவதற்காக என்னென்ன ஆசை வார்த்தைகள் கூறினிங்க? யார் யாருடைய வாழ்க்கையை யெல்லாம் ஒப்பிட்டுக் காட்டினிங்க?'' என்று தன்னையும் மீறி கூக்குரல் எழுப்பினுன்.

''சீ பேசாதே......தினம் பால் கொடுக்கிற பசுகூட தொழுவத்தில் தானே நிற்குது? நாளும் வீட்டைக் காவல் காக்கும் நாய்கூட வாசலில் தானே இருக்குது? அதைப்போல வேலைக்காரியான நீயும் வெளியிலே தான் இருக்கணும்......வீட்டு எஜமானியாக முடியாது'' என்று சங்கரியம்மாளையும், சாமிநாதரையும் மீறி கர்ஜித்தான் மாணிக்கம்.

''போடி...இல்லேன்னு. நீ ஆயிரம் ரூபாயைத் திருடிட்டுப் போயிட்டேன்னு புகார் பண்ணி, போலீஸிலே பிடிச்சுக் கொடுத்துடுவோம்', என்று எச்சரித்தாள் சங்கரியம்மாள்.

பொன்னிக்கு கோவென்று கதறியழவேண்டும் போல் தோன்றியது. இனியேனும் அங்கே நின்ருல், நிச்சயமாய் அவர்கள் தன்னைப் போலீசில் பிடித்துக் கொடுத்துவிடக் கூடும் எனப் பயந்த அவன், ஓட்டமும் நடையுமாக வந்து, தன் குடிசையில் இருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்துக் குமுறிக் குமுறி அழுதான். பணம் ஒன்று இல்லாததால், தான் புறக்கணிக்கப் பட்டதையும், பணம் இருக்கும் அவர்கள் நிரபராதியான தம்மைத் 'திருடி' என்று போலீஸிலே பிடித்துக் கொடுக்கத் துணிந்ததையும் எண்ணி யெண்ணி உருகினுள். தன்னை முதன் முதலில் பார்த்து. ஆதரித்த ஏஜண்டு முத்துவின், கரங்களைப் பிடித்து கதற வேண்டும்போல் தோன்றியது.


அவள் படும் வேதனையைப் பார்த்ததாலோ, என்னவோ ஓடி வந்த நித்திராதேவி, அவளை அணைத்து, தூக்கத்தைத் தந்து, அவள் சிறிதுநேரம் தன் துயரங்களை மறந்து, ஒய்வுகொள்ள உதவினுள்.

காரிருள் விலகி, சூரியன் பவனி வந்ததும், எல்லா உயிரினங்களும் தத்தம் வேலைகளைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததுகூட, பொன்னிக்கு தெரியவில்லை. யாரோ, ''பொன்னி, பொன்னி'' என்று கதவைத் தட்டும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தாள்.

வெளியே இரண்டு மூன்று பேர் நின்று கொண்டிருந்தார்கள். குரல் கொடுத்தது யார் என்பதும், வெளியே நின்று கொண்டிருப்பவர்கள் யார்? யார்? என்பதும், அவளுக்குத் தெரியவில்லை. ஒருவேளை நீ ஆயிரம் ரூபாயைத் திருடிட்டுப் போயிட்டேன்னு புகார் பண்ணி, போலீஸில் பிடித்துக் கொடுத்துடுவோம் என்று சங்கரியம்மாள் தன்னை மிரட்டியதைப் போல், அவர்கள் போலீஸில் புகார் கொடுத்து. போலீஸ்காரர்கள்தான் தன்னைக் கைது செய்ய வந்திருக்கிருர்களோ, என்று அஞ்சியபடியே எழுந்து வெளியே வந்தாள்.

வெளியே, ஏஜண்ட் முத்துவும்,

பத்திரிகை நிருபர் ஒருவரும், எதிர் வீட்டு வேலைக்காரன் பொன்னனும், நின்றுகொண்டிருந்தார்கள். ஏஜண்ட் முத்து தான் கையோடு கொண்டு வந்திருந்த சிமிழில் இருந்து, சிறிது குங்குமம் எடுத்து, அவள் நெற்றியில் அழகாக ஒரு திலகம் வைத்துக் கொண்டே, "உனக்கு முதல் பரிசு இலட்ச ரூபாய் விழுந்திருக்கம்மா" என்றார்,



"ஆமாங்க... அதனாலேதான் நான் கூட உங்களைப் பேட்டி காண வந்திருக்கேன்" என்றார் பத்திரிகை நிருபர். பொன்னி, தன் காதுகளையே நம்ப முடியாமல் நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது—

"பொன்னி, பொன்னி" என்று யாரோ, இரண்டு மூன்று பேர் எதிர்த் திசையில் இருந்து கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்தார்கள். கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டு, அவர்களை உற்று நோக்கினாள் பொன்னி. சங்கரியம்மாள், சாமிநாதர், மாணிக்கம் ஆகிய மூவரும் அவளை நோக்கிவந்து கொண்டிருந்தார்கள்.

சங்கரியம்மாள் முன்னால் வந்து, "உனக்கு இலட்ச ரூபாய் விழுந்திருக்கறதைப் பத்தி, முத்து சொன்னார் பொன்னி. இப்பதான் நீ எங்க வீட்டு மருமகள்" என்றான்.

"மன்னிச்சுக்குங்க... வேலைக்காரி, வீட்டு எஜமானியா வந்தா உங்க மதிப்பு என்ன ஆகும்?" என்று சங்கரியம்மாளுக்கு ஒரு கேள்வியைப் போட்டாள் பொன்னி. அவளைப் பின்னால்தள்ளிவிட்டு முன்னால் வந்த சாமிநாதர், 'அப்படியெல்லாம், சொல்லாதே நீ என் வீட்டு மருமகளேதான்" என்றார்.

"மன்னிச்சுக்குங்க ... வேலைக்காரி வீட்டு ஏஜமானியா வந்தா, உங்களை எவன் மதிப்பான்?" என்று அவருக்கும் இன்னொரு கேள்வியைப் போட்டாள். அவர்கள் இருவரையும் பின்னால் தள்ளிவிட்டு முன்னால் வந்த மாணிக்கம் "பொன்னி அவர்களை நம்பாதே என்னை நம்பு. உன்னை நான் ஏத்துக்கறேன்" என்றான்.

"இல்லேங்க ............ வேலைக்காரி வேலைக்காரனுக்குத்தான் மனைவியாகனும் நான் ஏதேனும் ஆசை வார்த்தைகள் கூறி, ஒரிரு நாட்கள் உங்க மனதைக் கெடுத்திருந்தால் என்னை மன்னிச்சிடுங்க" என்று அவனுக்குப் பதிலளித்த பொன்னி எதிர்வீட்டு வேலைக்காரன் பொன்னனோடு அவர்களிடமிருந்து விலகி... விலகிச் சென்றுகொண்டே இருந்தாள். அவர்களோடு ஏஜண்ட் முத்துவும், பத்திரிகை நிருபரும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தார்கள். ●

---

12-ம் பக்கத் தொடர்ச்சி

முற்று அண்ணாவை வெறுமுடலாய் தன்மடியில் வீழ்ந்து விடச் செய்தாளோ?

தேன்மகிழும் செந்தமிழில் தமிழ்நாடு எனும் பெயரைத் தான்மகிழச் சூட்டிவிட்ட தங்கமகன் அண்ணாவை, பாமகிழ மண்மகளும் பாசமுடன் மடிகிடத்தி நாமகிழ தாலாட்டி நலம்பாடவிழைந்தாளோ?

பண்பட்ட அண்ணாவைப் பாவியினம் பார்த்து விட்டால் கண்பட்டு விடுமென்று கருதித்தான் அவன் வயிற்றில் புண்பட்டு விட்டதென்று பொய்யான நோய் தந்து மண்பட்டுச் சேலையினால் மறைத்தவளை அணைத்தாளோ?

ஒருவேளை,

தேன்குரலால் புகழ்வளர்ந்த செந்தமிழன் அண்ணாவால் தென்றலுக்கும் பழிநேர்ந்தகாரணத்தால்,

தான்கொண்ட அழுக்காறால் தளபதியின் உயிர் மூச்சைத் தன்னோடு காற்றாகக் கரைத்ததுவோ?

சுவைகுறைந்த தென்றலுமே சுவைகூட்ட அவன் குரலைச் சுமந்துசென்று தனதாக்கிக் கொண்டதுவோ?

வளியென்றப் பெருங்காற்று வலிமைபெற வேண்டுமென வலிமைமிக்க அவன்மூச்சை வாரியெடுத்துப் போனதுவோ?

தித்திக்கும் அவன்பேச்சைத் திக்கட்டும் பரப்புதற்குக் கொத்தாக அவன் பேச்சைக் கொத்தியது சென்றதுவோ?

ஒருவேளை,

கண்ணீரால் வளர்த்தவனை, கண்ணியத்தின் தலைமகனை கருணைக்கடல் எனமக்கள் புகழ்ந்ததினால், தண்ணீரால் அலைவளர்த்து தலையசைக்கும் கருங்கடலும் அழுக்காறால் தலைமகனை அழித்ததுவோ? கடற்கரையில் புதைத்ததுவோ?

தன்னிடத்து முத்தெல்லாம் தலைவன் வாய் முத்துக்குத் தகுதியில்லை என்றறிந்து தமிழ்மகனைக் கொன்றதுவோ? தன்மணலால் மறைத்ததுவோ?

அலைகடலின் செல்வமெலாம் அவன் அறிவின் முன்னின்று ஆதிக்கம் இழந்ததினால் ஆத்திரந்தான் கொண்டதுவோ? அடிமணலில் புதைத்ததுவோ?

இனிக்கின்ற அண்ணாவின் இதயத்தின் சுவையாலே என்கரிப்புத் தீராதா என்றெண்ணிச் செய்ததுவோ? எழில் உடலைப் புதைத்ததுவோ?

எதைச் சொல்லி அழுவேனோ?

எதைக் கூறி முடிப்பேனோ?

—இறைவன்.



தெய்வத் திருவுருவே! தேவே! திருவிடத்துச்
செல்வமே! செம்மையே! செந்தமிழே! தார்பூண்ட
வேந்தே! விறல்மறவா! வேண்டுகிறோம் உம்இதயம்
தந்தருள்வீர்! தந்தவுயிர் போல்!

தோற்றம்: 1909 மறைவு: 1969

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
நிறுவனர்: சி. என். அண்ணாதுரை